

மதுரை மாவட்டத்தில் இன்று கலைஞர் நூலக அரங்கில் பள்ளி சாரா வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்ட 114 கற்போர் மையங்களைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு மாநில எழுத்தறிவு விருதுகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்கள் உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த், மதுரை மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவிண்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு) ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்) ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா, கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகராட்சியில் சுப்பராய செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்துகொண்டு விலையில்லா மிதி வண்டியை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கதிர்காமன், நகர அவைத் தலைவர் ராஜா., நகர பொருளாளர் ராமலிங்கம். நகர வழக்கறிஞர் அணி பரணி சந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மணிப்பூர் கலவரத்துக்கு காரணமே பா.ஜ.க. அரசுதான்

# நாடக ஆட்சி நடத்தும் மோடிக்கு பிரதமர் - பதவி ஒரு கேடா?

## கோவையில் மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம்!



கோவை, ஆக. 4

கட்டுக்கடங்காத கலவரம் மணிப்பூரில் நடைபெற்று வருகிறது. மோடி நாடாளுமன்றத்திற்கு வர மாட்டார், உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் பதில் அளிக்க மாட்டார், நாடக ஆட்சி நடத்தும் மோடிக்கு பிரதமர் பதவி ஒரு கேடா என கோவையில் சிபிஎம் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கேள்வி எழுப்பினார்.

கோவை காந்திபுரத்தில், மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு அலுவலகத்தில், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் செய்தியாளர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பில் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன், மாவட்டச் செயலாளர் சி.பத்மநாபன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் யு.கே.சிவஞானம் ஆகியோர் பங்கேற்றனர்.

பேட்டியின் போது கே.பாலகிருஷ்ணன் குறிப்பிட்டதாவது

மணிப்பூர் கலவரம் 3 மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடிக்கிறது. இன்னும் அக்கலவரம் கட்டுப்படுத்தப்படவில்லை. இது மெய்டெய், குக்கி என்ற இரு இனத்தவரின் மோதல் என்பது போன்ற தோற்றத்தை பாஜக ஏற்படுத்த முயல்கிறது. உண்மையில், இந்த கலவரத்தை தூண்டிவிடுவதே மணிப்பூர் மாநில பாஜக அரசும், அதன் முதல்வர் பைரேன் சிங்கும் தான். மணிப்பூர் மலைகளில் இருந்து மக்களை அகற்றி விட்டு, அந்த மலைகளை அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட்டுகளுக்கு தாரை வார்க்கவே இத்தகைய கலவரங்கள் திட்டமிட்டு பாஜகவால் நடத்தப்படுகிறது.

**தமிழக அரசின் உதவிக்கு வரவேற்பு**

கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மணிப்பூர் அரசும், ஒன்றிய அரசும் எந்த உதவியும் செய்யவில்லை. இந்நிலையில் தான் மனிதாபிமான உணர்வோடு, மணிப்பூர் மக்களுக்கு 10 கோடி ரூபாய் மதிப்புடைய அத்தியாவசியப் பொருட்களை கொடுக்க தமிழக அரசு முன்வந்துள்ளது. தமிழக முதல்வரின் இத்தகைய நடவடிக்கையை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறோம்.

'இந்தியா' கூட்டணியின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதை தடுக்கவே பல இடங்களில் கலவரங்களை ஏற்படுத்தி பெரும்பான்மை மக்களை திசை திருப்ப முயல்கின்றனர். மதம் என்ற தோற்றத்தை வைத்து அதன் அடிப்படையில் மக்களை திரட்டப் பார்க்கின்றனர். இந்தியா கூட்டணி வலுவடைந்து வருவதை கண்ட அதிர்ச்சியில்தான், பாஜக வினர் உடைந்த கட்சி, உடைக்கப்பட்ட கட்சிகளை அழைத்து கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். பாஜக கூட்டணியில் உள்ள 38 கட்சிகளின் பெயர்களை அந்த கூட்டணி தலைவர்களால் சொல்ல முடியுமா?

**இதற்குப் பெயர் நடை பயணமா?**

பற்றியெரியும் பிரச்சனைகளை பற்றி கவலைப்படாமல், அண்ணாமலையின் பாதயாத்திரையை துவக்கி வைக்க அமித்ஷா தமிழகம் வருகின்றார். தமிழ்நாடு அரசை விமர்சிக்கும் தார்மீக உரிமை அமித்ஷா விற்கு எங்கே இருக்கின்றது? மற்ற அரசியல் கட்சி களின் இயக்கத்தை விமர்சிக்கக் கூடாதுதான். ஆனால், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை நடைபயணம் நகைப்பிற்குரியதாக இருக்கிறது. சிறிது தூரம் நடந்து, பின்னர் சொகுசு வாகனத்தில் செல்வது, பின்னர் நடப்பது என அண்ணாமலை நடைபயணம் இருக்கின்றது. இது நடை பயணமா?

**மாநில உரிமைகளை பறிப்பதா?**

டெல்லி அரசு விவகாரத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்பை மீறி ஒன்றிய அரசே செயல்படு கின்றது. மாநில உரிமைகளை பறித்து ஒரே அரசு என்று செயல்படப் பார்க்கின்றது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கான உரிமைகளை கொடுக்க வேண்டாமா? உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்கின்றோம் என சொல்லாமல் நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்து, உச்சநீதி மன்றத்திற்கு, எதிரான போக்கை ஒன்றிய அரசு மேற்கொள்கிறது. ஒன்றிய அரசின் இதுபோன்ற செயல் மாநில உரிமைகளை பறிக்கும், நாட்டை சீர்குலைக்கும்.

திமுக தேர்தல் அறிக்கையில் கொடநாடு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து இருந்தார் கள். இந்த வழக்கைதுரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மார்க்சிஸ்ட் கட்சியும் முன் வைத்து வருகிறது. கொடநாடு வழக்கில் நிறைய மர்ம முடிச்சுகள் இருக்கின்றன. அதை வெளிப்படுத்தி உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருத்தணி, ஆக.4-

திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமது அயராது உழைப்பினால் திராவிட முன்னேற்ற கழகம் என்னும் ஜனநாயக பேரியக்கத்தை அசைக்க முடியாத எஃகு கோட்டையாக கட்டிக் காத்து திராவிட இணத்தின் தன்னிகளிங்கா தனிப் பெரும் தலைவரும். நூற்றாண்டு விழா கொண்டாடிவரும் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவரும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகம் மறைந்தும் மறையாதும் தல் நெஞ்சய் நிறைந்து வாழ்ந்துக் கொண்டிருக்கிற டாக்டர். கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் வருகிற (07.08.2023) திங்கள்கிழமை அன்று வர உள்ளது. அன்றைய மானின் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் விதமாக திருவாளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு, கட்ட கிளை தோறும் டாக்டர். கலைஞர் அவர்களின் திருவருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கியம். தூய்மை பணியாளர்களுக்கு ஆடைகளை வழங்கியும் டாக்டர். கலைஞர் அவணிகளின் புகழுக்கு பெருமை சேர்ப்போம்.

அதுசமயம் தலைமை செயற்குமு உறுப்பினர்கள், மாநிலமாவட்ட நிர்ராகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள். நிர்னயாகிகள். கிளை வார்டு வட்ட கழக செய்வாளாார்கள். நிர்நின் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர். நுனை அமைப்பாளர்கள். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்விட்ட கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் அணைணரும் டாக்டர்.மலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளில் தலைவரின் புகழுக்கு பெருமை சேர்க்கும்பண்ணம் மேற்கண்ட நினைவு நாள் நிரழ்ச்சியினை நடந்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கலைஞர் நூற்றாண்டு விழா! அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை!

# துறைமுகம் கிழக்குப் பகுதியில் பொதுக்கூட்டம்!

## முனைவர் கு.ஞானசம்பந்தம் - நடிகர் இளவரசு - கவிஞர் எழிலரசி சிறப்புரை! எஸ்.இராஜசேகர் தலைமை!

சென்னை, ஆக. 4-

சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கழகப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

நாளை (5.8.2023 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தம்பு செட்டி தெருவில் (மண்ணடி சந்திப்பு) நடைபெறும் இப்பொதுக் கூட்டத்திற்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.இராஜசேகர் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மற்றும் எஸ்.முரளி, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், என்.பி.எம்.சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம்கனி இரா.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிரதீப்குமார், எல். சம்பத் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் : ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், கே.சரஸ்வதி,

துறைமுகம் கிழக்கு - மேற்கு வட்ட கழக செயலாளர் : எல்.சந்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், த.கதிரவன், எம்.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம், வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

முனைவர் கு.ஞானசம்பந்தம், நடிகர் இளவரசு, கவிஞர் எழிலரசி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், மற்றும் வெ.பரிமளம், எல்.நவீன், ராஜேஷ் ஜெயின்,

கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, பி.கே.மூர்த்தி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், கே.சந்துரு, சங்கரி நாராயணன்,

கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன்,

சொ.வேலு, வி.சுதாகர், ஐ.சி.எப்.முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின்,

கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், அ.நிர்மலாதேவி, பி.உதயசங்கர், உமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் எ.பி.பூர்ணிமா,

வி.சங்கர், எம்.சுரேஷ், எஸ்.கதிர்வேலு, பிரஸ்சேகர், ஆர்.தங்கமணி, எ.மதுசூதனன், பி.ஜி.சுகுமார், டி.சுபாஷ்சந்திரபோஸ், வீடியோ கே.சம்பத், சாயராஜ், ஹாஜி த.தம்பிதுரை, டி.எஸ்.சேகர், லண்டன் க.முருகன், எம்.நாராயணன், நா.ரஞ்சித் விஜயபாலயன், எல்.எழில் அரசு, ஜிமாசிலாமணி, வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், கே.ஆர்.மதன்குமார், பூக்கடை எம்.முரளி, எம்.வி.ஆர்.சரவணக்குமார், ஏ.பி.எஸ்.செந்தில்குமார்,

டி.லோகேஷ், வானவில் விஜய், பா.ஜெகதீஸ், நா.துலுக்காணம், ஜெ.பாலமுருகன், புரசை ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், டி.பெரோஸ்கான், சுதா தீனதயாளன், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, பரிதி இளம்சுருதி, துரைகண்ணன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, கு.கிருஷ்ணமூர்த்தி உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் ஆ.நா.பார்த்திபன், க.கவியரசு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை! தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி - நவாஸ்கனி -பங்கேற்பு!

# வடசென்னையில் புத்தகத் திருவிழா- 2023 அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

## கோவி.செழியன் - சுந்தர ஆவுடையப்பன் சிறப்புரை!

சென்னை, ஆக. 4 -

நேசம் மனித வள மேம்பாட்டு மையம் சார்பில், வடசென்னை புத்தக திருவிழா 6.8.2023 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.30 மணிக்கு தங்கம் மாளிகையில் (சுங்கச்சாவடி அருகில்) நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை வகிக்கிறார். ஏ.டி.பி. போஸ், என்.துரைராஜ், எம்.மதியழகன், கே.இளையபெருமாள், ஏ.வி.எஸ். மாரிமுத்து, எ.ஆதிகுருசாமி ஆகியோர் முன்னிலை விக்கின்றனர். புத்தகத் திருவிழாவினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அரசு கொறடா கோவி.செழியன் ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் - மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி., நவாஸ் கனி எம்.பி,. ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர். முனைவர் சுந்தர ஆவுடையப்பன் சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் வி.ஜி. சந்தோஷம், ஏ.எம். விக்கிரமராஜா, கலைமாமணி வி.கே.டி.பாலன், உ.பலராமன், கே.ராஜன், கே.கணேசன், தி.மு.தனியரசு, யு.கணேசன், க.தேவி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். ஏ.எஸ். சரவண குமார் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சியில் சிலம்ப கலைஞர்கள் பாராட்டுப் பெறுவார்கள். 6.8.2023 முதல் 15.8.2023 வரை புத்தகத் திருவிழா நடைபெறுகின்றது.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!



**மாவட்டச்செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு**

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (04/08/2023 - வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7. செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள்,பகுதிக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஆகஸ்ட்.7.முத்தமிழறிஞர் நினைவு நாள்.

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**

செயலாளர் - சென்னை கிழக்கு மாவட்ட திமுக

# சென்னைவடகிழக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைகூட்டம்!



**மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு**

சென்னை வடகிழக்கு மாவட்டத்தில்அடங்கியபகுதிகழக, ஒன்றியகழக, பேரூர் கழகசெயலாளர்கள்அவசரஆலோசனைகூட்டம் மாவட்டஅவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் தலைமையில் இன்று (4.08.2023 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாதவரத்திலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில்கீழ்காணும் பொருள் குறித்து பேசஇருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இன்னாள்உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அனைத்துஅணிகளின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள்மற்றும்நிர்வாகிகள்அனைவரும் கலந்துகொண்டுசிறப்பிக்குமாறுகேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாள் பேரணி மற்றும் கழக ஆக்கப்பணிகள்

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** எம்.எல்.ஏ.,

செயலாளர் - சென்னை வட கிழக்கு மாவட்ட திமுக

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

**கோவை தெற்கு மாவட்டம், வெள்ளலூர் பேரூர், 8வது வார்டைச் சேர்ந்த கே.ஜெகதீஸ்வரன், 11வது வார்டைச் சேர்ந்த பேக்கரி ஏ.கனகராஜூ – குறிச்சி வடக்கு பகுதி, சுந்தராபுரத்தைச் சேர்ந்த எம்.கோவிந்தராஜ், திருமதி என்.பரிமளராணி – குறிச்சி தெற்கு பகுதியைச் சேர்ந்த இரா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



தூய்மைப் பணியாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சிஷ்யா பள்ளி மாணவியர் எழுதிய ' 'Developing Stories என்ற புத்தகத்தை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (03.08.2023) ஆழ்வார்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தலைமைப் பொறியாளர் என்.மகேசன், உர்பேசர் சுமீத் தலைமை நிருவாக அதிகாரி மஹ்மூத் சைட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



எண்ணூர் விரைவு சாலை விரிவாக்கத்தின் போது வீடுகளை இழந்த 83 மீனவர்களின் குடும்பத்துக்கு குடியிருப்பு வழங்க வேண்டி சென்னை மாவட்ட ஆட்சியரிடம் திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவரணி துணைத் தலைவருமான கே.பி.சங்கர் பொது மக்களுடன் சென்று கோரிக்கை மனு வழங்கினார்.